**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.232/2020**

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் நாள் புதன்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 27.03.2024 | தந்தை பெயர்: | அரங்கசாமி |
| பெயர்: | மகேஷ்<br>(PW-1 Chief ) | வயது : | 46/2024 |
| கிராமம்: | அல்லிவிளாகம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை : 27.03.2024.</u>**

நான் இவ்வழக்கின் 2–ம் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

15.07.2013–ம் தேதியிட்ட தாவா A அட்டவணைசொத்தை பொறுத்து 1–ம் வாதியின் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** (பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணம் செல்லதது என அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபணையானது தீர்ப்பின்போது பரிசீலிக்கப்படும்.) 1–ம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.112/2020–ன் பிராதின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 08.08.2013–ம்

தேதியிட்ட 3–ம் பிரதிவாதிக்கு 1, 2 மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 27.12.2013–ம் தேதியிட்ட 3–ம் பிரதிவாதிக்கு 1, 2 மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 30.11.2016–ம் தேதியிட்ட தாவா சொத்திற்காக UDR–க்கு முந்தைய அ பதிவேட்டின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 30.12.1947–ம் தேதியிட்ட முத்தம்மாள் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 03.01.1948–ம் தேதியிட்ட முத்தம்மாள் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 09.10.1948–ம் தேதியிட்ட முத்தம்மாள் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 04.04.1949–ம் தேதியிட்ட முத்தம்மாள் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 02.02.2021–ம் தேதியிட்ட மயிலாடுதுறை வருவாய் கோட்ட அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட பட்டா மாறுதல் செயல்முறை ஆணையின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 15.09.2020–ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான பட்டாவின் இணையவழி நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 09.06.20202–ம்தேதியிட்ட தாவா சொத்திற்கான அடங்கலின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 09.06.20202–ம்தேதியிட்ட தாவா சொத்திற்கான சிட்டாவின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 03.01.2014–ம் தேதியிட்ட 1–ம் பிரதிவாதிக்கு விசாலம்

எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 20.04.2009–ம் தேதியிட்ட 2–ம் பிரதிவாதிக்கு விசாலம் எழுதுக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்திற்கான புகை படம் மற்றும் சி.டி அத்துடன் புகைபட வல்லுநரால் வழங்கப்பட்ட சான்றுடன் தாக்கல் செய்யப்படுகிறது **அது வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 01.09.2020–ம் தேதியிட்ட சட்ட அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்யப்படுகிறது **அது வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி சட்ட அறிவிப்பை 1–ம் பிரதிவாதியும், 4–ம் பிரதிவாதியும் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டைகளின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.18 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது**. (எண்ணிக்கை–2) 12.03.1951–ம்தேதியிட்ட சுப்பு பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்யப்படுகிறது அ**து வா.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 03.09.1951–ம் தேதியிட்ட சுப்பு பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்யப்படுகிறது **அது வா.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 13.02.1989–ம் தேதியிட்டஎனது தக்ப்பனார் பெயரில் உள்ள மின் கட்டணம் செலத்தியதற்கான ரசீது அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.21 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.